ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் **342**
தலைப்பு **"**கடவுளின் திருஉருவை காண ஏங்குதல்**"**

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் உள்புறமாக தேடுவது என்றபுத்தகத்தின் பக்கம் **43-48** லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:நம் பகவானின் தெய்வீக திரு உருவை நேரில் தரிக்க வேண்டும் என ஏங்குவது தவறா**.**

பதில்:அனில்

குமார் சார்:

ஸ்வாமியின் தெய்வீக திரு உருவை நேரில் தரிசிக்க ஏங்குவதில் தவறில்லை.

நீங்கள் எல்லாம் சொந்த ஊரை விட்டு பெற்றோரை விட்டு வெளியூரில் இருக்கிறீர்கள்.

அப்போது நீங்கள் அவர்களை அடிக்கடி நினைத்து கொள்கிறீர்கள்.

பெற்றோரை பிரிந்து வெளியூரில் இருக்கும் குழந்தைகள் பெற்றோருடனேயே இருக்கும் குழந்தைகளை காட்டிலும் தங்கள் பெற்றோரை அதிகமாக நினைவு படுத்தி கொள்கிறார்கள்

மனமே இதற்கு காரணம்.

ஸ்வாமியின் திவ்ய தரிசனம் நமக்கெல்லாம் தெய்வானுபவத்தை கொடுக்கிறது.

அதே போல் ஸ்வாமி யின் தெய்வீக திரு உருவை தரிக்க முடியாத போதும் தெய்வானந்தத்தை அனுபவிப்பது நிராகாரமாகும்.

அதாவது உருவம் இல்லாத போது உருவமற்ற தெய்வீகத்தை உணர முற்படுவதே நிராகாரமாகும்

நம் ஸ்வாமி சொல்கிறார் ஒரு முறை ஸ்ரீ ராமரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டதாம்

ஸ்வாமி உங்கள் சகோதரர்களிலே மிகவும் சிறந்தவர் யார் என கேட்ட போது ஸ்ரீ ராமர் கூறினாராம் பரதன் தான் என்று.

இலக்குவன் எப்போதும் என்னுடன் இருக்கிறான்.

என் திரு உருவ தரிசனம் கிடைக்கப் பெறுகிறான்.

அந்த நிலையிலேயே எனக்கு சேவை செய்து என் தேவைகளை கவனித்து கொள்கிறான்.

பரதனோ என்னை விட்டு தள்ளி வெகு தூரத்தில் இருக்கிறான்.என் தரிசனம் கிட்டாததால் ராம நாம ஸ்மரணையில் ஈடுபட்டவாறு அலுவல்களை கவனிக்கின்றான்.என்னுடைய பாதுகைகளை அரியணையின் மேல் வைத்து நானே இருந்து அரசாட்சி செய்வது போல் பாவித்து ராஜ்ய பரிபாலனம் செய்து வருகிறான்.

இலக்குவனுடையது ஸாகர வழிபாடு,பரதனுடையது நிராகார வழிபாடு.

இரண்டில் நிராகார வழிபாடே சிறந்ததாகும் என்றார்.

எனவே நம் ஸ்வாமியை  விட்டு தொலைவிலிருக்கும் நீங்கள் எல்லாம் பரதன் போன்றவர்கள்.

நம் ஸ்வாமிக்கு அருகிலேயே இருக்கும் நாங்களெல்லாம் லஷ்மணன் போன்றவர்கள்.

ஸ்வாமியுடைய திருவுருவம் அதாவது ஸாகரம் அதையும் தாண்டி உருவமற்ற இறையுடன் மனதால் இணைந்து இருக்கின்ற நிலையை அடைய வேண்டும்.

உருவம் தாண்டி இரட்டை தன்மை இல்லாத பூரணமான அந்த இறையை அடைவதே அனைத்து ஆன்மீக பயிற்சிகளின் நோக்கமாகும்.

அதுவே நிராகாரமாகும்.

அடுத்த கேள்வி:

இதற்கு முன்னதாக ஆன்மீகம் என்பது தனி மனிதனுக்கு மட்டுமானதல்ல.

அது அனைவருக்குமானது பொதுவானது என்று சொல்லப்பட்டது.

ஆனால் மனதை உள் நோக்கி திருப்பு என சொல்லும் போது அது தனி மனித அனுபவமாகிறதே.அது போன்ற அனுபவங்களை பிறருடன் பகிர்ந்து கொள்ளலாமா.

பதில் அனில்குமார் சார்:

மதம் என்பது தனி மனிதன் சம்பந்தப்பட்டது.

ஆன்மீகம் என்பதோ அனைவருக்கும் பொதுவானது.அனுபவங்கள் தனிப்பட்டவை.ஆனால் அதை அனுபவிக்கின்ற ஆத்மா அனைவருக்கும் பொதுவானது.

தனி மனித அனுபவங்களை பகிர்ந்து கொள்வதில் தவறில்லை.ஆனால் அதை வைத்து பெருமை பேசுவதோ அகந்தை கொள்வதோ கூடாது.உலகியல் வாழ்க்கையில் வருகின்ற அகந்தையைவிட ஆன்மீக சாதனையாளருக்கு அகந்தை வந்து விட்டால் அது பேராபத்தை விளைவித்து விடும் என்று ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுகிறார்.அப்படி தற்பெருமை அடித்து கொள்கின்ற பழக்கம் இருந்தால் உடனடியாக நிறுத்தி விடுங்கள்.

அடுத்த கேள்வி:

நாங்கள் ஸ்வாமியை விட்டு வெகு தூரத்திலிருக்கிறோம்.நேரம் கிடைக்கும் போதெல்லாம் சேவை பணிகளிலும் பஜனையிலும் ஈடுபடுகிறோம்.

ஸ்வாமியின் திரு உருவ தரிசனம் பெற புட்டபர்த்திக்கும் செல்கிறோம்.

ஆனால் ஸ்வாமி அனைவரையும் தங்கள் உள் புற மாக பார்க்க சொல்கிறாரே.

ஸ்வாமியை உள்ளே தேட வேண்டும் என்றால் நாங்கள் புட்டபர்த்திக்கு வர வேண்டாமா.

பதில்:அனில்குமார் சார்:

நல்ல கேள்வி.

இதே கேள்வி ஸ்ரீ ரமண மகரிஷியிடமும் கேட்கப்பட்டது.

ஸ்வாமி குரு என்பவர் யார் என அவரிடம் கேட்டனர்.

மனிதனின் இறை பக்தி கண்டு கடவுளே குருவாக அவதரித்து கடவுள் உனக்கு உள்ளேயே இருக்கிறார் என்ற ஆத்ம தத்துவத்தை போதிக்கிறார்.மேலேயிருந்து கடவுள் இறங்கி வந்து நான் உன் உள்ளேயே இருக்கிறேன் என சொல்லி விட்டு செல்கிறார்.

நீங்கள் ஸ்வாமி யின் திரு உருவை தரிக்க புட்டபர்த்தி செல்வது அவர் உருவமற்ற எங்கும் நிறை பரம்பொருள் என்பதை உணர்ந்து கொள்ளத்தான்.

அடுத்த கேள்வி:நம்  ஸ்வாமி சொல்கிறார் உங்கள் உள்ளே என்னை தேடுங்கள் என்று.இதன் பொருள் என்ன.

அதை எவ்வாறு செயல்படுத்துவது.

பதில் அனில்குமார் சார்:

இந்த கேள்வியை நான் வேறு விதமாக வைக்கிறேன்.ஒரு முறை ஸ்வாமியிடம் நீங்கள் யார் என்று கேட்கப்பட்டது.இப்படி கேட்பதற்கு பதிலாக நான் யார் என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள் என ஸ்வாமி கூறினார்.நீங்கள் யார் என்பது உங்களுக்கு புரியும் போது நான் யார் என்பதும் உங்களுக்கு புரியும் என்றார்.

இதன் அர்த்தம் என்னவென்றால் ஸ்வாமியும் நாமும் ஒன்றே என்பதாகும்.

அதற்கு நம் மனதை உள்புறமாக திருப்ப வேண்டும்.

தினசரி வாழ்க்கையில் நம் மனம் வெளியுலகத்தின்பால் திரும்பியுள்ளது.இந்த மனம் உள்புறமாக திரும்ப வேண்டும்.முகம் பார்க்கும் கண்ணாடியை உங்கள் முன் நீட்டினால் அதில் உங்கள் முகம் தெரியும்.அதை என்னை நோக்கி திருப்பி கொண்டால் என் முகம் தெரியும்

என்கிறார் நம் ஸ்வாமி.

நம் மனமென்னும் கண்ணாடியை உள் நோக்கி திருப்பினால் நம் உள்ளேயே நாம் ஸ்வாமியை காண முடியும் ஏனென்றால் ஸ்வாமியும் நாமும் வேறு வேறு அல்ல.

வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்

ஜெய் சாயிராம்.